675

# சேதுமகத்துவக்கும்மி

O—185
N43
675

உ
சிவமயம்,

இராமேஸ்வர மான்மிய மென்னும்

# சேதுமகத்துவக்கும்மி

இஃது
சென்னப்பட்டணம் சொக்கலிங்கம்
அவர்களால்
இயற்றப்பெற்று

இராமேஸ்வரம் புஸ்தக ஷாப்
மு. அய்யாவு பிள்ளை அவர்களால்

மதுரை
விவேகாநந்தா பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1943. [விலை அணா 3.

0—,85
N43
675

Ac. No. 675
675
13 JUL 1943

சிவமயம்.

இராமேஸ்வர மான்மியமென்னும்,

# சேதுமகத்துவக்கும்மி

---

## விநாயகர் துதி.

### வெண்பா.

தேன்கறங்குஞ் சேதுநலஞ் சீர்மகிமைக் கும்மிதனை
நான்புகலுமாறு நலனருளும்—வான்புகழும்
சத்திவடி வேலவர்க்குச் சார்ந்த துணையளித்த
மத்தகஜ மாமுகனார் வந்து.

### கும்மி

பொன்னூற்றிலகும் புவிமீது கும்மி
புகலவருள்வீ ரிப்போது
சின்மயமாகிய தேசிகனே திருச்
சித்திவிநாயக மாமுகனே.

மாதுசரஸ்வதிபொற்கொடியேவிதி
மாண்பாய்மணந்தபிடிநடையே
தோதுடனிக்கும்மிசொல்லவென்னாவினில்
தோன்றுவாய்வாணிதயாபரியே.



## அவையடக்கம்.

காவினிற்றோகைமயிலாட அதைக்
கண்டுவான்கோழியதன்கூட
மேவிநடந்தவிதம்போன்றுபுவி
மேதையர்முன்னிலையானுமின்று

ஏதோதெரிந்துந்தெரியாதுஞ்சொல
இச்சைமிகுந்தேனிகழாது
ஈதுங்கும்மியெனக்குற்றங்களைந்துநீர்
யேற்றுக்கொள்வீரேயுமதுபிள்ளை. 5

## நூல்.

கும்மியடிபெண்காள்கும்மியடியுங்கள்
கொண்டைகுலுங்கவேகும்மியடி
செம்மையதாகவேசேதுமகிமையைச்
செப்பிடக்கேளடியற்புதமாய். 6

மங்கையரேயிங்குவாருங்கடிசேது
மாநகர்க்காக்ஷியைப்பாருங்கடி
திங்களணிந்திடுஞ்சங்கரனைப்பணி
தெய்வமறையவர்வீதியினில் 7

நித்தியம்யாகந்தொடுப்பாராம்யாரும்
நேர்ந்தவரங்கள்கொடுப்பாராம்
பத்தியாயத்தனைப்போற்றுவாராம்பாச
பந்தவினைகளைநீற்றுவாராம். 8

காசாளர்வீதியொருபுறமாம்கற்
கனகவணிகரில்லொருபுறமாம்
தாராளமாயின்பந்தன்னைநல்குந்திருத்
தாசிகள்வீதியொருபுறமாம்.

ஓவியர்வீதியொருபுறமாம்ஞான
மோங்குங்கடைகளிருபுறமாம்
தாவித்தனுக்கோடிபோகவாருமெனச்
சாற்றும்ரயில்வேஸ்டேஷன்பாருங்கடி.

கங்கையரேகோவில்பாருங்கடிராம
நாதன்புகழ்க்கும்மி கூறுங்கடி
பங்கயன்மால்துதியித்தலமான்மியம்
பாவையரேசொல்வேன்கேளுங்கடி.

ஆடிமுழுக்கென்று அன்பாககாமும்
ஆண்டுக்கொருதரம்தென்பாக
தேடிப்போய்சேதுவில்ஸ்நானஞ்செய்தாலிந்த
ஜென்மசாபல்யவிமோசனந்தான்.

## நவபாஷாணம்.

அன்னைபிதாகுருதெய்வமென்றேயறி
யாதலக்ஷியஞ்செய்மானிடர்கள்
பன்மைவினைதீரவேணுமென்றால்நவ
பாஷாணதீர்த்தத்தில்தீருமடி.

மிக்கதைபேசுபவர் கள்ளைக்குடிப்பவர்
நீசப்பெண்கள்தன்னைச்சேருபவர்



மர்தையிலிருந்துகொள்ளையடிப்பவர்
மங்காதபாதகம்நீங்குமடி. 14

நஞ்சமென்றோரைக்கெடுப்பவரும்நடுச்
சந்திமரத்தையொடிப்பவரும்
அஞ்சாமற்றொண்டரைத்தூசித்துசெய
அரும்பாவங்களெல்லாம்நீங்குமடி. 15

ஆகையால்க்ஷேத்திரந்தன்னைத்தேடி
அங்கமர்ந்திடுங்கங்கையெலாமடி
வேகமுடன்ராமலிங்கத்தைக்கும்பிட்டு
வேண்டிக்கும்மியடியுங்கடி. 16

## தீர்த்தங்களின் பெயர்கள்.

சக்கரதீர்த்தம்வேதாளதீர்த்தம்புவிச்
சன்மபாபவிநாசதீர்த்தம்
திக்குப்புகழ்சீதாதேவிகுண்டமொடு
சீர்தையகிழ்மங்கலதீர்த்தம். 17

அமுதவாபிதீர்த்தம் அங்கதீர்த்த
மகத்தியதீர்த்தமனுமகுண்டம்
குமதமிகுராமலட்சுமணதீர்த்தம்
கொங்கலர்ந்தோங்குஜடாதீர்த்தம். 18

லட்சுமிதீர்த்தமக்னிதீர்த்தம்விண்ணோர்
நாடித்துதி சக்கரதீர்த்தம்
நச்சணிகண்டச்சிவதீர்த்தமிக
நற்சங்கதீர்த்தங்கயாதீர்த்தம். 19

கங்கையமுனையுங்கோடிதீர்த்தமாற்
கருணைசேர்சாத்யாமுததீர்த்தம்
பங்கமிலாதசருவதீர்த்தமொடு
பாவந்தீர்க்குந்தனுக்கோடிதீர்த்தம். 20

பத்தராடுமிருபத்துநான்குதீர்த்தம்
பார்புகழிச்சேதுதன்னிலுண்டாம்
சித்தியளித்திடுஞ்சக்கரதீர்த்தத்தின்
சேதியைக்கேளுங்கள் மாதர்களே. 21

தர்மதேவதைவிதுமனலம்புகை
தார்புகழ்காலவமாமுனியும்
கர்மமதுதீரவிப்புனலின்மூழ்கிக்
காக்ஷிபெற்றுக்கதியெய்தினரே. 22

முன்னாளமரர்க்கிடுக்கணிழைத்திட்ட
மூர்க்கமகுடாசூரன்றனையே
சின்னாபின்னமாய்ச்சேதித்திடவெண்ணிச்
சிந்தையோர்ந்துபரமேச்வரனும்.

கோபமுடனேமதித்திடலும்காளி
கோரரூபியாயுதித்திடலும்
பாபம்மிகுத்தமகுடாசூரன்றனைப்
பற்றியேபின்றொடர்ந்தனளாம். 24

அம்மைவருங்கோபந்தன்னைக்கண்டுவெரு
வாத்திரத்தோடுமனம்பயந்து
செம்மையதாகவிளங்கிடுஞ்சக்கர
தீர்த்தத்தினுள்ளேமறைந்தனனாம்.



வீரமகிடன்மறைந்திடவேமதி
வேணியுமையுந்தன்னூர்தியெனும்
கோரமிகுந்திடுங்கோளரியாற்கண்டு
கொன்றுகளித்தங்குநின்றனளே. 26

அன்புடன்சக்கரதீர்த்தத்திலேவிண்
ணமரர்கள்கங்கைதன்னைநிரப்பி
இன்புடனெல்லோரும்புனலாடி
யெழுந்துதேவிபதமேத்தினரே. 27

பத்தியுடனிந்தத்தீர்த்தத்திலேமூழ்கி
பத்திரகாளிபதமலரை
சித்தத்தில்வைத்துதினந்துதிப்போர்பகை
தீருமெனத்தேவர் செப்பினரே. 28

ஆனதினாலிதில்மங்கையரேமுன்னே
ஆடிடுவோமடிநங்கையரே
தேனமர்மாமலரோந்திடும்வேதாள
தீர்த்தச்சிறப்பினைக் கேளுங்கடி. 29

## வேதாள தீர்த்தம்.

காலவமாமுனிபுத்திரியானதோர்
காந்திமதியென்னுங்காரிகையை
சீலமிகுந்தசுதரிசனனென்பவன்
சேரப்பலாத்காரஞ் செய்ததினால் 30

அம்முனிவன்சாபம்பெற்றனனும்அவ
னேகம்வேதாளம்போலுற்றனனும்

செம்மைசேர்ந்தத்தீர்த்தத்தில்மூழ்கிச்
சேர்ந்தவந்தரூபம்மாற்றினனும்

பாதாளமும்விண்ணோடந்தரமுமிந்தப்
பாருலகுள்ளோர்தினம்போற்றும்
வேதாளதீர்த்தமெனத்திருநாமமி
மேதினிதன்னிலுண்டானதுவே.

இத்தீர்த்தத்திலெவ்வாராடினுமவர்க்
செய்ந்தபசாசத்துயரமற்றே
முத்தியைப்பெற்றென்றும்வாழ்ந்திடுவாரென
முன்னென்மொழிந்தார்மறையோர்கள்.

## பாபநாச தீர்த்தம்.

வேதியன்வேள்வியின்மந்திரத்தைமுன்னாள்
வேண்டுந்திடமதியென்றூர்ந்த
மேதினிதன்னிலோர்சூத்திரர்க்குமதை
விண்டசுமதிப்பிராமணர்க்கும்.

பாவமதினாலிருவர்களுமிந்தப்
பாரிற்பசாசங்களாகுமாய்த்
தாவமுடனேயலைந்திடுங்காலை
தவத்திற்சிறந்த வகத்தியராம்

உத்திரவின்படியிப்புனலின்மூழ்கி
ஊழ்வினைப்பாவந்தனைத்துலைத்தார்
இத்தகையாலிதைஎத்தலத்தோர்களு
மேத்திப்பாவநாசமென்றுரைப்பார்.



## சீதாகுண்டம்.

சீதையின்கற்புநிலையறியவெண்ணி
ஸ்ரீரகுராமனுமக்கினியில்
சோதனையாகமுழுகியெழுவெனச்
சொல்லியதாலம்மொழிப்படியே. 37

அம்மையுஞ்செந்தழலைவளர்த்து
அரிராமன்பதத்தைமனம்பதித்து
செம்மையதாகமுழுகிடவங்கனல்
செந்தாமரைப்புனலானதுவே. 38

ஜானகியுமிதில்மூழ்கியதாலிதைச்
சார்ந்த சீதாகுண்டமென்றுரைப்பார்
வானவர்தங்கட்கிடுக்கமதுசெய்த
வல்லகயாலவுணன்றனையே. 39

ஆகண்டலன்வெட்டிக்கொன்றதினாலவன்
றன்னைத்தோசம்பற்றிநின்றதினால்
வேகமதாய்மலர்வேதியன்சொற்படி
வேண்டியிக்குளத்திலாடினனே. 40

## மங்கல தீர்த்தம்.

செல்வச்சயந்தவனமெனுமானகர்ச்
செம்மல்மனோஜவராஜனென்பான்
பல்வினையாற்றன்னரசுப்பதியைப்
பகைத்தகோவலன்றனக்களித்து. 41

வார்ந்தகுழலாள்மனைவியோடு
மைந்தனைக்கூட்டிவனம்போந்து
சோர்ந்துமயங்கிவிழுந்திடவேயங்கு
தோன்றிப்பாராசமுனீச்வரரும்.

வந்திடவேமனையாளுடன்மைந்தனும்
மலரடிபோற்றிமிகவணங்கி
சுந்தரமாமுனிதன்னிடம் தங்களின்
தொந்தரையாவும்புகன்றிடவே,

அந்த முனிவன் மொழிப்படியேயிதி
லன்புடன்மூழ்கிமனைப்படியே
விந்தைமறையவர்தங்களுக்குமிக
வேண்டிப்பரிசங்கொடுத்திடவே,

தேருங்கரியும்பரியுடனே இன்னுஞ்
சேர்ந்தபணிமணியாயுதமும்
வீறுஞ்சிவிகையோடெல்லாப்படைகளும்
யேர்தனுக்கங்குவந்துற்றிடவே.

கோசலனோடெதிர்த்தானும்அவன்
கொண்டதலத்தைப்பறித்தானும்
காவலனானமன்றேஜவராஜனும்
காதலியுடன்புவிவாழ்ந்தனனே.

மங்கலம்யாவுங்கொடுத்ததினாலிதை
மங்கலதீர்த்தமெனப்புவியோர்



பொங்கமுடனே யனைப்பார்களிதைப்
போற்றிக்கும்மியடியுங்கடி. 47

## அமுதவாபி தீர்த்தம்.

ஞானிலம்போற்றிடுங்கும்பமுனிக்கிளை
காரணனானமகரிஷியும்
மேனிலமான சுவர்க்கமதைநாடி
மேருவருகிற்றவம்புரிந்தும். 43

முத்தியைக்காணாது சித்தமிகவாட
முக்கண் விமலன்மொழிப்படியே
அத்தருணந்தனினித்தடம்மூழ்கமே
லானவமுதமடைந்தனனே. 49

முத்தியமுதங்கொடுத்ததினாலிதை
முன்னாளமுதவாவியெனவே
இத்தரையோர்போற்றும் மேகாந்தமீச்சுரத்
தெல்லையிலிப்புனலுன்னதுவே. 50

## பிரமகுண்டம்.

பங்கயன்செந்தனலானமலைமுடி
பார்த்தேனென்னபிர்மன்பாவமற
அங்கயர்க்கண்ணுமைபார்வதிபாக
னருளியபிரகாரமிங்குவந்து 51
செய்திடயாகமெலாமுடித்துவந்த
தேவர்கட்காகுதிதான்கொடுத்து

கொய்தகபாலேசான்பதம்போற்றி
கூறியநன்வரம்பெற்றனனே.

பிரமனும்யாகம்வளர்த்ததினாலிதை
பிர்மகுண்டமெனப்பேசிடுவார்
கர்மவினைகளைப்போக்கிடுமாமிதிற்
காகூதிமிகவுண்டாங்காரிகையே.

## அனுமகுண்ட தீர்த்தம்.

ராவணனைக்கொன்றபாவமகற்றிட
ராமன்சிவலிங்கம்பூசைசெய்ய
ஆவலுடனே நருமதாலிங்கத்தை
ஆஞ்சநேயர்கொண்டுவாவெனவே.

சீதாமனோகரன்செப்புமொழிப்படி
சென்றவனுமான்வருமுனமே
தோதானவேளையுமுற்றிடவேயங்கு
தோகைசீதாதேவியுந்தெரிந்து.

பார்த்திபலிங்கம்பிடித்திடவேபூசை
பக்தியாய்இராமன் முடித்திடவே
வேர்த்தனுமான்சென்றுலிங்கமதைக்கொண்டு
வேண்டியவர் முன்புவைத்தனரே.

சென்றுவருமுனம்பூஜைமுடித்ததைச்
சித்தமதிலனுமான்வருந்த
வெற்றிபெற்றரகுராமனும்பார்த்ததை
வேறோரிடத்தில்வைப்போமெனவே.



கூறிடுமொழிகேட்டவனுமானுங்
கூடாதென்றவ்வுரையைமறுத்து
சிறிடவேராமன்முன்வைத்தலிங்கத்தை
சித்தம்போலநீபெயர்ப்பாயென. 58

செப்பியவார்த்தையைக்கேட்டவனுமானும்
தீரமொடு விஸ்வரூபமுடன்
முப்புரத்தைவென்றருத்திரனைப்போல
மூர்க்கமொடுராமலிங்கமதை. 59

மாருதியுங்கோபமுற்றிடவேநெடு
வாலாலிங்கத்தைச்சுற்றிடவே
வாரிதிபோலக்குருதிபெருகிட
வாலறுந்தப்பால்விழுந்திடவும் 60

சித்தம்மயங்கிமூர்ச்சித்திடவேஇராமன்
சீதையுஞ்சோகமகற்றிடவே
வித்தகனானவனுமான்விழுந்த
விடத்தையனுமகுண்டமெனவே. 61

தீர்த்தமுண்டாக்கிப் புகழ்ந்தனராம்அதில்
தேவர்களாடிமகிழ்ந்தனராம்
கீர்த்தியுள்ளரகுராமனும்மாருதி
கேட்டவரங்களளித்தனராம். 62

## அகத்திய தீர்த்தம்.

திங்கள்சடையன்மலைமகளைமணஞ்
செய்திடும்போதிலகத்தியனை

பொங்கமுடன்விந்தமாமலைக்கெர்வத்தைப்
போக்கிவாவெனப் புகன்றிடவே.

செய்யுமணக்கோலக்காக்ஷியைக்காணாது
செல்லேனெனக்கும்பன்செப்பிடவும்
துய்யவேதாரண்யமென்னுந்தலத்தினிற்
றோன்றியிக்காக்ஷிதருவமென்றே.

பார்வதிபாகன்பகர்ந்திடவேயிகப்
பத்தியாய்நின்று பணிந்திடவே
சீர்வதியுங்கும்பன்விந்துக்கெர்வம்போக்கி
சேதுதலத்தினில்வந்தடைந்து.

செங்கமலப்புனலுண்டுபண்ணிநல்ல
சேதுராமலிங்கம்பூஜைபண்ணி
துங்கமுடனே வரம்பலநல்கிநற்
றூயமுனிவனுமேகினனே.

அன்றுமுதற்கந்தமாதனத்திலிதை
யன்பாயகத்தியதீர்த்தமென
என்றும்புவியுளோரிப்புனலிலாடி
யெண்ணும்வரங்களைப்பெற்றனரே.

ராமன்சிவலிங்கம்பூசைசெய்துசேது
நன்னகராமதையுண்டுபண்ணி
சேமமதைப்பெறச்சேனையோடெல்லோரும்
சென்றார்குளிர்ந்தபுனலாடி.

0-,85
1/47
Acc. No. 675
Dt 21.11.77



வேண்டும்வரங்களையீந்தாரிராமனும்
வேகமோடய்யோத்திமாநகர்க்கு
தாண்டும்பரிகரிச்சேனையோடெல்லோரும்
சந்தோஷமாகவே சென்றனரோ. 69

ராமனாலுண்டான தீர்த்தமதாலதை
ராமதீர்த்தமெனவேபுவியோர்
நாமமதனைப்புகன்றுதினந்தினம்
நங்கையேமூழ்குவார் பாருங்கடி. 70

நொந்தபேர்பொருளபகரித்தோர்சிவ
நோம்புகளன்றியினுமனந்தம்
எந்தவிதபவமானாலுமிந்த
ராமர்தீர்த்தத்தினால்நீங்குமடி. 71

675

இந்திரசித்தனைக்கொன்றபவம்நீங்க
எண்ணிலட்சுமணன்லிங்கமதை
சுந்தரமாய்ப்பூஜைசெய்துதன்பேரினாற்
றோன்றிடத்தீர்த்தமுண்டாக்கினாராம். 72

## ஜடா தீர்த்தம்.

ராட்சதர்தங்கள்குருதியகற்றிட
ராமலட்சுமணன்ஸ்தானஞ்செய்ய
மாட்சியுடன்தடமாக்கியதாலிதை
மானிலத்தோர்ஜடாதீர்த்தமென்பார். 73

## லெட்சுமி தீர்த்தம்.

செந்திருமாமகள்மாதவனைவிட்டு
சின்னாட்பிரிந்தவள்சேருதற்கு

கந்தமாதனபருவதத்தில்வந்து
காமதகனன்றனைத்துதித்து.
பார்புகழ்தீர்த்தமொன்றுண்டாக்கியதிற்
பத்மாஸனியும்புனலாடி
சீர்வளர்மாலினைச்சேர்ந்ததாலட்சுமி
தீர்த்தமெனப்பெயரானதுவே.

மங்கையேதீர்த்தமகத்துவங்கோடி
மண்ணெண்பொன்றனைச்சீக்கும்படி
இக்கிதவீடுபெறவேண்டுமென்றால்
இலக்ஷ்மிதீர்த்தத்தில்மூழ்கடியோ.

## அக்கினி தீர்த்தம்.

சென்னிறமானகோரக்கினிதேவனுஞ்
சென்றுமகோததியிற்படிந்து
நன்னயமாய்ஸ்ரீராமன்பதத்தினை
நாடித்துதிசெய்யும்போதினிலே.

அக்கினிதேவன்றனைப்பார்த்துநீயு
மாடியகங்கைக்குன்பேர்கொடுத்தோம்
முக்கியமாயதில்மூழ்குவோர்தங்களின்
முப்பிறப்பின்வினையுந்தீர்த்து

புத்திரர்மித்திரரோடுபுவியினிற்
போகங்களெல்லாமடைந்திடுவார்
எத்திசையோர்களுமேபோற்றிடவேயுனக்
கெல்லாவரமீந்தோமென்றனரே.



## சக்கர தீர்த்தம்.

முன்னாளிற்புத்தனென்றோர்மாமுனி
மோட்சம்பெறத்தவஞ்செய்திடவே
பன்னகப்பாயனைப்போற்றித்தனக்கொரு
பாதகம்வாராது காத்திடென்றான். 80

அந்தமுனிக்கொருபாதகம்நேராமலே
அன்புடன்சக்கரத்தைக்கொடுக்க
சொந்தமாச்சக்கரங்காக்கத்தவஞ்செய்து
ஜோதிமயத்திற்கலந்தனனே. 81

சக்கரமிப்புனல்சார்ந்ததினாலிதை
சக்கரதீர்த்தமெனப்புவியோர்
அக்கரவம்புனைராமீசனைப் புகழ்ந்
தாடிடுவார்வினைசாடிடுவார். 82

## சிவ தீர்த்தம்.

தென்பொதிகைவளர் மாமுனியுந்தவஞ்
சேர்ந்த வகலிகைநாயகனும்
முன்பொருநாளினிலிப்பதியில்வாழு
முக்கணனைப்பூசைசெய்திடவே. 83

ஈசனுஞ்சிந்தைமிகக்களித்து அவ
ரிஷ்டசித்திக்கோர்புனலளித்து
தாசர்க்கருளுஞ்சிவனுங்கொடுத்ததால்
தாரணியிற்சிவதீர்த்தமென்பார். 84

இஷ்டசித்திகளையெல்லாங்கொடுத்திட
யீசனுமிப்புனலீந்ததினால்
அஷ்டசித்திகளும்நாடிடுமாம்மிதி
லாடிடுவோர் வினையோடிடுமாம். 85

## சங்க தீர்த்தம்.

கங்கைமதிகொன்றைதும்பையணிந்திடுங்
கண்ணுதற்பெம்மான்றிருவருள்சேர்
சங்கமுனியுமுண்டாக்கியதாலிதை
சங்கதீர்த்தமெனவேபுகல்வார் 86

## கங்கை, யமுனை, கயை.

கான்முடமானவிரைக்குவமாமுனி
கங்கையமுனை கயைமூழ்க
மான்மழுவேந்துமகேசன்றிருவருள்
மன்னியமாதவத்திற்சிறந்தோன் 87

சித்தத்திலெண்ணித்தினந்தினமுமிகச்
சிந்தித்தோர்காலாற்றவமியற்ற
முத்திக்குவித்தானமூன்றுநதிகளும்
மோதமலர்க்குழல்மாதர்களாய் 88

அம்முனிவனைதிர்நண்ணிடவுமாத
ரன்புடன்வந்தனம்பண்ணிடவுங்
கொம்மைமுலையினுள்மூவருங்கங்கையாய்
கூடிப்பெருகிமறைந்திடவும் 89



வேதவிரைக்குவமாமுனியுமதில்
விந்தையாய் மூழ்கிக்களித்ததினால்
பூதலங்கங்கையமுனைகயாவெனப்
போற்றிடுமாம்பவம்தீர்ந்திடுமாம். 90

## கோடி தீர்த்தம்.

லங்கைக்கரசனைக்கொன்றபவந்தீர
ராமன்லிங்கபூஜைசெய்திடுநாள்
கங்கையையங்குவரவழைக்கவெண்ணி
கைதனிலுள்ளவிற்கோடியினால் 91

பார்மீதினில்ராமனூன்றிடவேயங்கு
பாதாளகங்கையும் தோன்றிடவே
சீர்மிகமேவிடும்ராமீசரன்றன்
சிரத்திலபிஷேகம்செய்தனராம் 92

கோதண்டக்கோடியினால் வருவித்ததால்
கோடிதீர்த்தமெனவேயுரைப்பார்
வேதண்டத்தீசனருள்மிகநாடிடும்
வேண்டிவந்திப்புனலாடுவர்க்கே 93

கொண்டமனையாளைவிட்டயல்மாதுடன்
கூடிக்கலந்திடுந்தோஷமன்றி
முண்டைகளைக்கூடும்பாவமும்கோடியில்
மூழ்கினால்நீங்குமொருகொடியில். 94

## சர்வ தீர்த்தம்.

அந்தகனைசுதரிசனன்புவி
யார்க்கதீர்த்தமெலாமாடுதற்கு

சிந்தையிலெண்ணி ஸ்ரீராமனுதன் றிருச்
சேவடியைத்துதிசெய்திடவே 95

பத்தர்க்கருள்செயுசித்தன்விடையேறிப்
பக்ஷமாயந்தகயாமுனிமுன்
சித்திகொடுத்துவிழியுந்தெரிந்திட
செய்துமுன்வந்தவ்விடத்தினிலே 96

தாரணியினுளபுண்யநதிகளைத்
தானழைப்பாயெனத்தன்விடைக்கு
காரணிபாகன் நவின்றமொழிப்படி
நந்தியுந்தன்காலதாரப்புவியை 97

சீக்கிரமாயங்குதோண்டிடவேசர்வ
தீர்த்தங்களும்வந்துவேண்டிடவே
சாக்கிரமாமுனியாடியதாலிதை
சர்வதீர்த்தமெனப்பேருளதாம் 98

சர்வதீர்த்தம்பார்க்கசெல்வோமேநல்ல
சன்னதிமுன்பாகயிருக்காமே
உரிமையாய்ச்சேதுபோய்வருவோமேநல்ல
உற்சாகங்களையடைவோமே 99

ராவணன்றம்பிவிபீஷணன்சொற்படி
ராமன்றனுக்கோடியாலணையை
மாவல்லமையோடுகீறியதாலிதை
மானிலத்தோர்தனுக்கோடியென்பார் 100



## ஸ்ரீராம தனுஷ்கோடி தீர்த்தம்.

இத்தனுக்கோடியிலாடிடினுமிதை
யாவர்விழியினுனோடிடினும்
முத்திசித்தியும்பெறுவாரெனராம
மூர்த்திமொழிந்தனர்ஜானகிக்கே 101
கோட்டையைத்தகர்த்துத்தூர்த்தவருமிகு
கோள்களைச்சொல்லிபிழைப்பவரும்
மாட்டுமந்தையிற்புணர்ந்தவர்பாவமும்
மாக்ஷியாஞ்சேதுவிற்றீருமடி 102
வீட்டில்நெருப்பையிடுபவருந்தரு
வேனென்றுசொல்லிமறுத்தவரும்
தேட்டமாய்ப்பணத்தைவீணேயழித்தவர்
செய்பாவங்களெல்லாந்தீருமடி 103
அந்தணரைப்பசுமைந்தர்களைக்கொலை
அஞ்சாமற்றுணிந்துசெய்திடுவோர்
செந்தமிட்சொற்கவிவாணரையிகழ்ந்த
தீவினையுமிங்கேபோகுமடி 104
ஜெபதபங்களைமறந்தவர்கள்பல
தெய்வங்களையும்பழித்தவர்கள்
அபகீர்த்தியாய்ப்பலஆலயந்தன்னில்
அசுசைசெய்பாவந்தீருமடி 105

## இரணவிமோசன தீர்த்தம்.

மாதவமாமுனிவர்களுடனும்உயர்
வானரந்தணர்பிதிர்க்கடனும்

பூதலத்தோர்களகற்றிடவேயிதைப்
பொற்புடன்செய்தாராமீசனுமே 106

இப்புனலிலெவராடினுமவர்கட்
கேற்றரணத்தையகற்றுதலால்
இப்பிதவமுமிரணவிமோசன
மேகாந்தராமீச்சரமுளதாம். 107

## பஞ்சபாண்டவ தீர்த்தம்.

பாண்டவரைவரும்ராஜசூயயாகம்
பாரிலியற்றிடுநாளதனில்
வேண்டிவந்தித்தலந்தன்னிலிலங்கிடும்
வித்தகனானராமீச்சுரனை 108

சிந்தித்தைந்துபுனலாக்கினராம்தங்கள்
சிந்தைத்துயரெலாம்போக்கினராம்
வந்தித்துப்பாண்டவதீர்த்தமென்றெல்லோரும்
வாழ்த்துவராம்புகழ்ந்தேத்துவராம். 109

## தேவ தீர்த்தம்.

தேவர்மகீசுரயாகம்புரிந்திடச்
சிந்தையிலெண்ணித்தேவைப்பதியில்
ஆவலுடன்தேவதீர்த்தமெனப்பெய
ரன்பாயளித்ததிலாடினரே. 110

## சுக்ரீவ தீர்த்தம்.

வானரவேந்தனானசுக்ரீவனும்
வந்துராமலிங்கம்சேவைசெய்து



வானவர்போற்றத்தன்னாமமதாற்புனல்
வண்ணமுடனொன்றமைத்தனனே 111

## அங்கதன், நளன், நீலன், கெவன், கெவாக்ஷன், கந்தமாதனன் தீர்த்தம்.

சேனாபதியாம்நளனொடுநீலனும்
சேர்ந்தபசுக்கணனங்கதனும்
வானாடவர்துதிவல்லவிபீஷணன்
மன்னவன்மந்திரிநால்வருடன் 112

தங்கள்பேராற்நீர்த்தம்பண்ணினராம் சேது
தற்பரன்பாதத்தைநண்ணினராம்
மங்களமும்பலதந்திடும்மாமிதில்
மங்கையரேமூழ்குவோம்வாருங்கடி 113

## பிரமஹத்தி விமோசனம்.

ராமன்லிங்கமதைப்பூஜைபண்ண லங்கை
ராவணனத்தியுந்தான்விலகி
மாமலைபோலப்பின்செல்லுவதைக்கண்ட
மாதவன்பூமிதனிலிருத்தி 114

காலபயிரவன்றன்னையேயவ்விடங்
காவலனாகவேவைத்துமிர்த
ஞாலமதுபுகழோங்கிடும்ராமனும்
நன்னயமாய்ப்புனலொன்றுசெய்து 115

பிர்ம்மகத்திதோஷம்போக்கியதாலதின்
பேரும்பிர்ம்மகத்திவிமோசனமாம்

கர்மவினையாவும்போக்கிடுமாமிதின்
காக்ஷிமிகவுண்டாங்காரிகையே 116

தேவாரத்திருவாசகஞ்சொல்வோர்களைச்
சிந்தைகலங்கவடித்தவர்கள்
ஆவிமிகுபாதகங்களெல்லாம்பிர்ம
ஹத்தித்தீர்த்தத்தினிற்றீருமடி 117

## கபி தீர்த்தம்.

தேசந்துதிசெயும்ராமனின்வானரச்
சேனைராமலிங்கம்பாதமதை
வாசமலர்கொண்டு பூஜைசெய்தவர்
வந்துபடிந்ததினாலிதனை 118

தேவர்களும்புவிமானவருந்திகழ்
சித்தர்களுமிதிலாடிடுவார்
பாவங்கள்தீர்த்திடுமாமிதனையிந்தப்
பாம்பன்மேவுங்கபிதீர்த்தமென்பார் 119

## பைரவ தீர்த்தம்.

மாலயன்போற்றிடுஞ்சேதுராமலிங்கம்
மாமலர்ப்பாதந்தனைத்துதித்து
காலபயிரவன்றன்போற்செய்த
காக்ஷிதருந்தீர்த்தம்பாருங்கடி 120

## காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி தீர்த்தம்.

ஆரணன்றன்னாற்படைத்ததோர்மங்கையை
யாசையுடன்றானணையவென்றே



பூரணமாகநினைந்தழைக்கவந்தப்
பூவைமறுத்தோர்மான்வடிவாய் 121

ஓடிடவேகண்டசெங்கமலத்தனும்
ஓங்குங்கலையதாய்ப்பின்றொடர
நாடியயனுயிர்வாங்கிடவேவிடை
நாதன்சிலைக்கணையெய்தனனே 122

பூவையன்றன்னுயிர்வாங்கிடவேஅவர்
பூவையராமூவரேங்கிடவே
தேவர்துதிக்குமரனாருரைப்படி
சேதுராமீசனைச்சிந்தைவைத்தே 123

மும்மங்கையுந்தீர்த்தஞ்செய்தனராம்சேது
மூர்த்திபதம்போற்றியுய்ந்தனராம்
செம்மலரோனுயிர்பெற்றிடவீசனும்
சிந்தைகளித்தருளீந்தனனே. 124

காயத்திரியோடுசாவித்திரிமிகக்
காசினிபோற்றுஞ்சரஸ்வதியும்
நேயத்தோடிப்புனலாடியதாலவர்
நேர்ந்தவன்றாமமும்வாய்ந்ததுவே 125

எத்தனைகோடிஜனக்கூட்டமிந்த
இன்பார்தீர்த்தமூழ்கினார்நாட்டம்
முத்திமோனத்திலிருப்பதைப்பார்மனச்
சித்தபத்தியுடன்சேவிப்போமே. 126

அசுவத்தாமனுமுன்பாரதயுத்தத்தில்
ஆனபதினெட்டாம்நாளிரவில்
விஸ்வரூபமொடுபாண்டவர்மைந்தரை
வெட்டிமடித்ததின்பாவமதால் 127

சேர்ந்தசிசுவத்திற்பற்றிடவே இந்தச்
சேதுதலத்தினிலுற்றிடவே
வார்ந்தகங்கைச்சடைராமீசனைப்போற்றி
வந்தபவத்தைத்தொலைத்தனராம் 128

கங்கையில்மூழ்கியிச்சேதுவில்மேவிடுங்
கண்ணுதற்பெம்மான்றனைத்துதித்து
சங்கையில்லாதபவங்களான்றனன்
சந்தோஷமாய்ப்பதியெய்தினனே. 129

## (சேது மாதவர்)

கூடற்கரசனும்புண்ணியபாண்டியன்
கோதையொடுதனுக்கோடியதில்
ஆடல்செய்துபரந்தாமனைநோக்கி
அன்புடன்யாகமியற்றிடவே 130

எந்தலைச்சோதிக்கச்செந்திருமாமகள்
எட்டுவயதுள்ளபெண்வடிவாய்
காந்தியோடுவரக்கூடற்கரசனுங்
கண்டழைத்துத்தன்புதல்வியைப்போல் 131

அற்புதமாகவளர்ந்துவருகையில்
ஆழியிற்றுஞ்சியநாரணனுங்



கற்புமிகுந்ததன்றேவியைக்கண்டிடக்
கண்ணுதற்பெம்மானடியவர்போல் 132

பூதியோடக்குமணிபுனைந்துகங்கைப்
புண்ணியக்காவடிதோளணிந்து
வேதியனைப்போலச்சேதுப்பதியினில்
விளங்கிடும்கந்தவனம்புகுந்து 133

தேமலர்க்கொய்திடும்மாமகளைப்பற்றிச்
செந்திருயாலவன்றுணிமூக்க
கோமகன்புண்ணியபாண்டியன்றன்னிடங்
கூவியுரைத்தனர்தோழியரும் 134

அந்தமொழிமன்னன்கேட்டிடவேயவ
னங்கமதையேவாட்டிடவே
சொந்தமாய்த்தண்டவீரரொடுவந்து
துட்டப்பிராமணனைப்பிடித்து 135

செவ்வையதாகப்புடைத்துவிலங்கிட்டு
சீக்கிரத்திற்சிறைசெய்யுமென
அவ்வீரர்வேந்தனுரைப்படியேகோவி
லார்ந்தவரையினிலிட்டனரே 136

பூமகளோடுபொருந்தியநாரணன்
புண்ணியப்பாண்டியன்றன்கனவில்
எமமதில்வந்துகாக்ஷிகொடுத்ததை
எந்தனுங்கண்டுவிழித்தெழுந்து 137

புண்ணியபாண்டியன்பார்த்திடவுஞ்சிறை
தன்னிலதுபோலத்தோன்றிடவும்
மங்கையும்லெட்சுமியாகவிருப்பதை
மன்னனுங்கண்டுமிகப்பணிந்தான் 138

மாதவன்மாமகளும்மகிழ்ந்துகூடல்
மன்னவன்றன்னைமிகப்புகழ்ந்து
பூதலம்போற்றக்கருணைசுரந்திந்தப்
புண்ணியசேதுவமர்ந்தனராம் 139

இந்தமகிமையாற்சேதுமாதவனென்
றேற்றிடுவாரெப்புவியோரும்
வந்துதனுக்கோடியாத்திரைசெய்தபின்
மாமலர்கொண்டெனையேற்றுவரேல் 140

காசியிலாடியஅதின்பலனும்சேதுக்
கங்கையில்மூழ்கியஅதினபலனும்
மாசின்றிநாமேவழங்கிடுவோமென
மாமகள் கேள்வன்மொழிந்தனனே 141

அந்தப்படிசேதுயாத்திரைசெய்யு
மனைவர்களுஞ்சேதுமாதவனின்
கந்தமலர்க்கழல்போற்றிப்பலன்பெறுங்
காட்சியைப்பாருங்கள்நங்கையரே 142

நங்கையரேயினிவாருங்கடிசேது
ராமலிங்கஞ்சேவைபாருங்கடி
சங்கையணிந்திடுஞ்சேதுமாதவனின்
தாமரைப்பாதம் மூதற்றுதித்தோம் 143



முத்தியளித்திடுமீசனருளிய
மூக்கணன்சத்திக்கணபதியை
சித்தியளித்திடவித்தருணத்தினிற்
சிந்தித்துக்கும்மியடியுங்கடி 144
நந்தியின்னாமங்கூறுங்கடிராம
நாதன்றனையெதிர்பாருங்கடி
துந்துபிமேளம்முழங்குவதுஞ்சோதிச்
கூடதீபங்கள்விளங்குவதும் 145
அந்தணர்கள்வேதம்பாடுவதும் நடை
அன்னமின்னார்நடமாடுவதும்
சுந்தரமாதவர்போற்றுவதும்லிங்கஞ்
சோதிமயமாகத்தோற்றுவதும் 146
பார்ப்பவர்பாவம்பறப்பதையும் அன்பர்
பக்தியாய்ப்போற்றிச்சிறப்பதையும்
கோர்த்தமலர்க்குழல்மங்கையரேகண்டு
கும்பிட்டுக்கும்மியடியுங்கடி 147
ஆதியும்அந்தமுமானதெய்வம்துதி
யன்பர்தமக்கருள்செய்யுந்தெய்வம்
மேதினியும்விண்ணுமானதெய்வம் ராமன்
வேண்டும்வரங்களளித்ததெய்வம் 148
பிர்மகத்திப்பவம்மாற்றுந்தெய்வம் மறை
பிர்மாதிதேவரும்போற்றுந்தெய்வங்
கர்மவினைகளையாற்றுந்தெய்வம் இந்தக்
காசினியோர்புகழ்ந்தேற்றுந்தெய்வம் 149
சேதுராமீசனுமானதெய்வம் எந்தன்
சிந்தைப்படியருள்செய்ததெய்வம்
மாதுபருவதவர்த்தனியோடிங்கு
மங்களமோடுவிளங்குந்தெய்வம் 150

தன்னைத்துதித்துமிகக்கூறுங்கடிபிர
தட்சிணம்செய்குவோம்வாருங்கடி
முனனேமுளைததோர் அந்தரபூர்வரும்
முத்தியளிக்குமகாதேவரும் 151
சிந்தித்தவர்க்கருள்தன்னைத்தினந்தருந்
தெக்ஷிணாமூர்த்தியிலங்குவதும
மந்தரத்தின்புயங்கொண்டு விளங்கிட
வந்தவிஸ்வேசன்விசாலாட்சியும் 152
நன்மையதாகவிளங்குவதும் அங்கு
நான்குவேதமுமுழங்குவதும்
பன்னகமும்புலிப்பாதனுமுன்னாடிய
பாண்டரங்கன்றில்லைததாண்டவனும் 153
வானவர்தங்களிடுக்கணியற்றியும்
வானுலகத்தினிலேநிறைந்த
தானவர்தங்கள்குலமறுத்தசிவ
சண்முகன்றன்னையும்பாருங்கடி 154
மல்கும்பலமலர்கொண்டுவணங்கியே
வாழ்த்திக்கொன்றைமலரணியுஞ்
செல்விபருவதவர்த்தனியாலயம்
சென்றிடுவோம்வாரும் நங்கையரே 155
தங்கக்கொடிமரம்தோணுவதும் அங்கு
சார்ந்திருக்கும்நந்திகாணுவதும்
மங்கையரேயம்மைபாதமலரினை
வணங்கிக்கும்மியடியுங்கடி 156
அந்தணர்கள்பூஜைசெய்வதையும் விண்
ணமரர்கள்பூமழைபெய்வதையும்
சுந்தரமங்கையராடுவதும் அந்தத்
துய்யநற்கீதங்கள்பாடுவதும் 157



சங்கீதங்கள்மிகப்பாடுவதும் பக்தர்
சந்தோஷமாகநின்றாடுவதும்
மங்கையரெல்லோருமம்மையின்பாதத்தை
வணங்கிக்கும்மியடியுங்கடி. 158
சண்டேஸ்வரனைப்போற்றுங்கடியவர்
தாள்மலரைப்பணிந்தேற்றுங்கடி
சண்டமாருதியளித்தவனுமானைச்
சார்ந்துகும்மியடியுங்கடி. 159
மின்னொளிபோலவும்பொன்மயமாகவும்
விளங்கிடும்வாகனத்தின்சிறப்பும்
நன்னயமானபடத்தோடக்குமணி
நாதம்முழக்கும் வலம்புரியும். 160
முத்துப்பவளமும்சோவிமஞ்சப்பெட்டி
மோகமின்னாரணிசிந்தூரமும்
நத்துப்புலாக்குடன்நாணவிதம்விற்கும்
நாகரீகக்கடைபாருங்கடி. 161
சித்தப்படியெல்லாங்கொள்ளுங்கடி இந்தச்
சேதுராமன்நாமம்விள்ளுங்கடி
முத்தலம்போற்றிடுமித்தலம்வாழ்த்திட
முழங்கிக்கும்மியடியுங்கடி. 162
எத்தனைகோடிஜனக்கூட்டமிந்த
இன்பார்தீர்த்தமூழ்கினார்காட்டம்
முத்திமோனத்திலிருப்பதைப்பார்மனச்
சித்தபத்தியுடன்சேவிப்போமே. 163
தண்ணீர்ப்பந்தல்வைத்திருக்குதடிமிக்க
தாகவிடாய்களைத்தீருங்கடி
அன்புடனேஐயர்காப்பிஹோட்டலின்கண்
அருந்துவோம்பக்ஷணம்வாங்களடி. 164

675 0-85

 1143

ராமேஸ்வரத்தினிற்பத்தகவியாபாரம்
சாடிச்செய்யுஞ்சிறப்பென்னசொல்வேன்
தாம்தவில்லாமல்வாங்களடிசித்ரத்
தையலேபுத்தகம்வாங்கிப்படி. 1[illegible]
கேட்டபுத்தகங்களீய்ந்திடுவாரெங்குங்
கியாதிசேர் அய்யாவுபிள்ளையிடம்
பாட்டுப்புஸ்தகங்கள்வாங்கிமகிழ்ச்சியாய்ப்
பாடலாஞ்சீக்கிரம்வாங்களடி. 1[illegible]
தேன்கமழ்சென்னைநகர்வாசன்மோன
சிவனடியார்கட்கு விஸ்வாசன்
மாண்புடனேசொக்கலிங்கந்தமிழினை
மகிழ்ந்துபாடியடியுங்கடி 1[illegible]
மூர்த்திராமலிங்கத்தைப்போற்றிஅவர்
முன்றுதிசொல்லிமலர்தூற்றி
தீர்த்தமதாடியமானிடர்க்குஉற்ற
தீவினைநோய்களுமேபறக்கும். 1[illegible]
தேவரும்மூவரும்தான்வாழிதேவைச்
சின்மயமாதவரும்வாழி
பூவிலிக்கும்மிபடித்தோர்கள்நல்ல.
புண்ணியங்கையிற்பிடித்தோர்கள் 1[illegible]
எல்லவரும்வாழியாகவேயிந்த
மேதினிதன்னில்சுகமும்பெற்று
முன்னைவினைகளும்போக்கிடவேராமீசர்
மோக்ஷங்களுமேகொடுத்திடுவார். [illegible]

இராமேஸ்வர மான்மிய மென்னும்

சேது மகத்துவக் கும்மி முற்றிற்று.